**நடப்பு நிதி ஆண்டின் முதல் 9 மாதங்களில் அத்தியாவசிய பொருள்கள் இறக்குமதி 45% அதிகரிப்பு**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு நிதி ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் (ஏப்ரல் – டிசம்பர்) சமையல் எண்ணெய், பருப்பு வகைகள், மோட்டார் வாகனங்கள், பால், உணவு தானியங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்கள் இறக்குமதி ரூ.75,948 கோடியாக உயர்ந்துள்ளது. இது, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தில் ரூ.52,492 கோடியாக இருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது இறக்குமதி 44.7 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்த புள்ளி விவரங்களை மத்திய வர்த்தக அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

பழங்கள் – காய்கறி

பழங்கள் மற்றும் காய்கறி இறக்குமதி வியக்கத்தக்க வகையில் 93.2 சதவீதம் அதிகரித்து ரூ.3,834 கோடியிலிருந்து ரூ.7,406 கோடியாக உயர்ந்துள்ளது. தனிநபர் ஆண்டு வருமானம் அதிகரித்து மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட்டு வருவதால், பழங்கள் மற்றும் காய்கறிகளுக்கான தேவைப்பாடு அதிகரித்து வருகிறது.

இந்தியா தனது சமையல் எண்ணெய் தேவைப்பாட்டில் 50 சதவீதத்தை

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது. சமையல் எண்ணெயை அதிக அளவில் இறக்குமதி செய்வதில் உலக அளவில் நம் நாடு முதலிடத்தில் உள்ளது. பயன்பாட்டிலும் முன்னிலை வகித்து வரும் நாடுகளில் ஒன்றாக நம் நாடு உள்ளது.

முதல் ஒன்பது மாதங்களில் சமையல் எண்ணெய் இறக்குமதி 67.6 சதவீதம் அதிகரித்து ரூ.20,791.50 கோடியிலிருந்து ரூ.34,854 கோடியாக உயர்ந்துள்ளது. கச்சா பாமாயில் இறக்குமதி அதிகரித்ததையடுத்து, ஒட்டுமொத்தத்தில் சமையல் எண்ணெய் இறக்குமதி உயர்ந்துள்ளது என மத்திய வர்த்தக அமைச்சகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய பொருள்களின் மொத்த இறக்குமதியில் சமையல் எண்ணெயின் பங்கு 46 சதவீதமாக உள்ளது. உணவு பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் சமையல் எண்ணெய் மற்றும் பருப்பு வகைகளை இந்தியா அதிக அளவில் இறக்குமதி செய்து வருகிறது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட காலத்தில் பருப்பு வகைகள் இறக்குமதி 19 சதவீதம் அதிகரித்து ரூ.6,029 கோடியிலிருந்து ரூ.7,173 கோடியாக உயர்ந்துள்ளது. அத்தியாவசிய பொருள்கள் இறக்குமதியில் இதன் பங்கு 9.4 சதவீதமாக உள்ளது. நாட்டில் பருப்பு உற்பத்தி அண்மைக் காலமாக அதிகரித்து வருகிறது. இதனையடுத்து, இனி பருப்பு இறக்குமதி குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மோட்டார் வாகனங்கள் இறக்குமதி 71 சதவீதம் அதிகரித்து ரூ.1,659 கோடியிலிருந்து ரூ.2,839 கோடியாக உயர்ந்துள்ளது.

குடை, பூட்டு

குடைகள், பூட்டுகள், பொம்மைகள், கண்ணாடி சாமான்கள் உள்ளிட்ட சிறுதொழில் நிறுவன தயாரிப்புகள் இறக்குமதி 44 சதவீதம் அதிகரித்து ரூ.1,128 கோடியிலிருந்து ரூ.1,623 கோடியாக உயர்ந்துள்ளது. ஆல்கஹால் கலந்த பானங்கள் இறக்குமதி 55 சதவீதம் அதிகரித்து ரூ.593 கோடியாகவும், நறுமண பொருள்கள் இறக்குமதி 70 சதவீதம் அதிகரித்து ரூ.954 கோடியாகவும் அதிகரித்துள்ளது. ரப்பர் இறக்குமதி 16.5 சதவீதம் அதிகரித்து ரூ.2,905.53 கோடியாக உயர்ந்துள்ளது.

அதேசமயம், உணவு தானியங்கள் இறக்குமதி 94 சதவீதம் குறைந்து ரூ.226 கோடியிலிருந்து ரூ.14 கோடியாக குறைந்துள்ளது. பால் மற்றும் பால் பொருள்கள் இறக்குமதி 3.7 சதவீதம் குறைந்து ரூ.697 கோடியாக குறைந்துள்ளது.

மொத்த இறக்குமதி

முதல் ஒன்பது மாதங்களில் அனைத்து வகை பொருள்களின் மொத்த இறக்குமதி சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 34 சதவீதம் அதிகரித்து ரூ.12.28

லட்சம் கோடியிலிருந்து ரூ.16.51 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. மொத்த இறக்குமதியில் அத்தியாவசிய பொருள்களின் பங்கு 4.6 சதவீதமாக உள்ளது. இதோனேஷியா, சீனா, மலேசியா, அர்ஜென்டினா, ஜெர்மனி, கொரியா, அமெரிக்கா, கனடா, ஜப்பான், தாய்லாந்து, இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து அத்தியாவசிய பொருள்கள் இறக்குமதி அதிகரித்துள்ள நிலையில், பிரேசில், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி குறைந்துள்ளது.

பொருள் குவிப்பு வரி

உள்நாட்டில் உணவு பொருள்கள் விலை மிகவும் அதிகரிக்கும் நிலையில், அத்தியாவசிய பொருள்கள் மீதான இறக்குமதி தீர்வையை மத்திய அரசு குறைக்கும். எனினும், இந்த இறக்குமதியால் உள்நாட்டு நிறுவனங்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறதா என்பதை மத்திய அரசு கண்காணிக்கிறது. பாதிப்பு ஏற்படும் நிலையில், பொருள் குவிப்பு வரி, உள்நாட்டு வர்த்தக வரி போன்றவை விதிக்கப்படுகின்றன.

## பிப்ரவரி 29 நிலவரப்படி சர்க்கரை உற்பத்தி 1.87 கோடி டன்



நடப்பு பருவத்தில் (2011 அக்டோபர் – 2012 செப்டம்பர்) பிப்ரவரி 29–ந் தேதி வரையிலான காலத்தில் சர்க்கரை உற்பத்தி 15 சதவீதம் உயர்ந்து 1.87 கோடி டன்னாக அதிகரித்துள்ளது. இது, கடந்த 2010–11 பருவத்தின் இதே காலத்தில் 1.63 கோடி டன்னாக இருந்தது எனஇந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

சர்க்கரை உற்பத்தியில் மகாராஷ்டிரா மாநிலம் முதலிடத்தில் உள்ளது. இங்கு பிப்ரவரி 29 நிலவரப்படி 64.90 லட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது, முந்தைய

பருவத்தின் இதே நாள் நிலவரத்தைக் காட்டிலும் 14 சதவீதம் அதிகமாகும்.
சர்க்கரை உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் உள்ள உத்தரபிரதேசத்தில் உற்பத்தி 13 சதவீதம் வளர்ச்சி கண்டு 52.70 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. கர்நாடாகா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் முறையே 28.70 லட்சம் டன் மற்றும் 8.20 லட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. ஆந்திரபிரதேசத்தில் சர்க்கரை உற்பத்தி 20 சதவீதம் அதிகரித்து 8.71 லட்சம் டன்னாக உள்ளது.
இவ்வாண்டு செப்டம்பர் மாதத்தில் நிறைவடையும் பருவத்தில் நாட்டின் சர்க்கரை உற்பத்தி ஒட்டுமொத்த அளவில் 2.60 கோடி டன்னாக உயரும் என ஆலைகள் சங்கம் தெரிவித்துள்ளது. இது, கடந்த பருவத்தில் 2.42 கோடி டன்னாக இருந்தது. நடப்பு பருவத்தில் சர்க்கரை உற்பத்தி 2.45 கோடி டன்னாக இருக்கும் என அரசு மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

## எதிர்வரும் 2012–13–ஆம் நிதி ஆண்டில் வேளாண் கடன் இலக்கை 25 சதவீதம் உயர்த்த திட்டம்



தீரஜ் திவாரி
புதுடெல்லி
வாராக்கடன் அதிகரித்து வரும் நிலையிலும், வரும் 2012–13–ஆம் நிதி ஆண்டில் வேளாண் கடன் இலக்கை 25 சதவீதம் உயர்த்த மத்திய நிதி அமைச்சகம் திட்டமிட்டுள்ளது.

விதிமுறை

பாரத ரிசர்வ் வங்கி விதிமுறைகளின்படி, வங்கிகள் வழங்கும் கடன்களில் 40

சதவீதத்தை விவசாயம், சிறு தொழில் மற்றும் நலிந்த பிரிவினர் உள்ளிட்ட முன்னுரிமை துறைகளுக்கு வழங்க வேண்டும்.

கடந்த 2010–11–ஆம் நிதி ஆண்டில் வேளாண் துறைக்கு நிர்ணயிக்கப்பட்ட ரூ.4.75 லட்சம் கோடி கடன்களில் முதல் அரையாண்டில் பொதுத் துறை வங்கிகள் 50 சதவீத கடன்களை வழங்கியிருந்தன.

வேளாண் துறைக்கு வங்கிகள் வழங்க வேண்டிய நேரடி கடன் 13.5 சதவீதமாகும். சில பொதுத் துறை வங்கிகள் கடந்த 3 ஆண்டுகளாக இந்த இலக்கை எட்டாத நிலையில், மத்திய நிதி அமைச்சகம் அந்த வங்கிகளிடம் விளக்கம் கோரியுள்ளது.

வேளாண் பிரிவிலும் வாராக்கடன் இடர்பாடுகளை வங்கிகள் சந்தித்து வருகின்றன. கடந்த நிதி ஆண்டில் இப்பிரிவில் வாராக்கடன் 73.91 சதவீதம் அதிகரித்து ரூ.14,487 கோடியாக உயர்ந்தது. இது, முந்தைய 2009–10–ஆம் நிதி ஆண்டில் ரூ.8,330 கோடியாக இருந்தது.

வேளாண் கடன்களை பொறுத்தவரை அறுவடைக்குப் பின்னரே கடன்கள் வசூலாகும் என்பதால், வாராக்கடன்கள் தற்காலிகமானது எனவும், இன்னும் 2 மாதங்களில் அறுவடைக்குப் பின் நிலைமையில் மாற்றம் ஏற்படும் எனவும் மத்திய நிதி அமைச்சகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சேமிப்பு கிடங்கு

இந்நிலையில், அறுவடைக்குப்பின் தானியங்கள் பாதுகாப்பிற்காக சேமிப்பு கிடங்கு வசதிகளை பெற விரும்பும் விவசாயிகளுக்கு வாடகை செலுத்துவதற்கு ஏதுவாக 7 சதவீத சலுகை வட்டியில் கடன் வழங்கும் திட்டம் ஒன்றை வங்கிகள் அண்மையில் அறிமுகம் செய்துள்ளன.